சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2012–13ம் ஆண்டு மானியக் கோரிக்கை எண்.42ன் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு எண்.42 – ஊராட்சி ஒன்றியங்களில் தினக்கூலி அடிப்படையில் 10 வருடங்களுக்கு மேலாகப் பணிபுரிந்த பணி உதவியாளர்கள் (Work Assistants) – கல்வித் தகுதி அடிப்படையில் ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர் பணியிடங்களில் 184 நபர்களை பணியமர்த்துதல் – வேலை வாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்படாதமைக்கு 1970ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய பணி விதிகளை தனியர்கள் பொருட்டு தளர்வு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண்:69 நாள் 06.08.2012

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித ந.க.எண்.14059/2012/இ3, நாள் 3.7.2012.

---

ஆணை:–

09.04.2012 அன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானிய கோரிக்கை எண்.42ன் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி) அவர்களால் கீழ்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"ஊராட்சி ஒன்றியங்களில் தினக்கூலி அடிப்படையில் 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றியவர்களில் தொழில்நுட்ப தகுதியுடையவர்களுக்கு சாலை ஆய்வாளர் நிலை–2 ஆக முறைப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மீதமுள்ள 197 நபர்களுக்கு அவரவர் கல்வித்தகுதியின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய கீழ்நிலை காலிப்பணியிடங்களில் பணியமர்த்தப்படுவர்"

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்திட ஏதுவாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தினக்கூலி அடிப்படையில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணி முடித்த 195 நபர்களின் பட்டியலை மேலே படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார். மேற்சொன்ன 195 பணியாளர்களில் வேறு பணிக்கு சென்றுவிட்டவர்களை நீக்கி பணி வழங்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை 191 என ஆணையர் தெரிவித்துள்ளார். அரசின் பரிசீலனைக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பியுள்ள 191 நபர்களில் 7 நபர்கள்

(கு.பி.பாா

1997-க்கு பின்னர் தினக்கூலியாக பணியமர்த்தப்பட்டவர்கள். ஏற்கனவே 1997ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்பே தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்களை சாலை ஆய்வாளர் நிலை-II ஆக இத்துறையில் ஈர்த்துக் கொள்ளப்பட்டதால் அந்த நிலைப்பாட்டினை இந்நேர்விலும் கடைபிடிப்பதே சரியாக இருக்கும் என்பதால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பிய கருத்துருவில் உள்ள 7 நபர்கள் (1997க்குப் பின்னர் தினக்கூலியாக பணியமர்த்தப்பட்டவர்கள்) இந்நிகழ்வில் அரசால் பரிசீலிக்கப்படவில்லை.

3. அதன் அடிப்படையில் மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் இவ்வாணையில் பிற்சேர்க்கையில் உள்ளவாறு ஊராட்சி ஒன்றியங்களில் தினக்கூலி அடிப்படையில் பணி உதவியாளர்களாக (Work Assistant) 10 ஆண்டுகள் பணி முடித்த 184 நபர்களில் அவரவர் தகுதியின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள பதிவுரு எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு முறையாக பணியமர்த்த அரசு ஆணையிடுகிறது.

(1) மேற்காணும் 184 நபர்களில் 10-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் அதற்கு மேல் கல்வித்தகுதி பெற்ற 167 நபர்களை பதிவுரு எழுத்தர்களாகவும், பத்தாம் வகுப்பு தோல்வி மற்றும் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றோர் 17 நபர்களை அலுவலக உதவியாளர்களாகவும் ஊராட்சி ஒன்றிய பணியிடங்களில் பணியமர்வு செய்து, முறையே பதிவுரு எழுத்தராகப் பணியமர்த்தப்படுபவர்களைப் பொறுத்தவரை வேலை வாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்படாதமைக்கு 1970ம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய குழுக்கள் பணியமைப்பு (அலுவலர் மற்றும் பணியாளர் தகுதிகள்)விதிகளில் விதி 3(பி) மற்றும் அலுவலக உதவியாளராக பணியமர்த்தப்படுபவர்களைப் பொறுத்தவரை 1970ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய குழுக்கள் பணியமைப்பு (தகுதிகள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் நியமனம்) விதிகளில் விதி 5(பி) ஆகியவற்றை தளர்வு செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூலின் முதல் தொகுதியில் பகுதி-IIல் அடங்கியுள்ள தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 48ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி பதிவுரு எழுத்தராக பணியமர்த்தப்படுபவர்களைப் பொறுத்த வரை 1970ம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய குழுக்கள் பணியமைப்பு (அலுவலர் மற்றும் பணியாளர் தகுதிகள்) விதிகளில், விதி 3(பி)ஐ தளர்வு செய்தும், அலுவலக உதவியாளராக பணியமர்த்தப்படுபவர்களைப் பொறுத்தவரை 1970ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய குழுக்கள் பணியமைப்பு (தகுதிகள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் நியமனம்) விதிகளில், விதி 5(பி) ஆகியவற்றை தளர்வு செய்து மேதகு ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

(2) இவ்வரசாணையின் பிற்சேர்க்கை- Iல் கூறப்படும் நபர்கள் பதிவுரு எழுத்தராகவும், பிற்சேர்க்கை- IIல் கூறப்படும் நபர்கள் அலுவலக உதவியாளராகவும் பணியமர்த்தப்பட்டு, அவர்களது பணியினை வரன்முறை செய்யப்படும் முன்னர் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய பணி விதிகளில் மேற்குறிப்பிட்ட விதிகள் நீங்கலாக வேறு ஏதேனும் விதித் தளர்வு தேவைப்படின் உரிய விதியின் அடிப்படையில் விதித்தளர்வு கோரி அரசுக்கு கருத்துருக்களை அனுப்பிவைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(த.பி.பா)

(3) பதிவுரு எழுத்தர்/அலுவலக உதவியாளர் பணி வரன்முறை செய்யப்படுவதனால் ஏற்படும் பணப்பயன்கள் யாவும் ஆணை வெளியிடப்படும் நாள் முதல் தான் வழங்கப்பட வேண்டும். ஊதிய நிலுவைகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(4) சம்மந்தப்பட்ட மாவட்டங்களில் பதிவுரு எழுத்தர் / அலுவலக உதவியாளர்களுக்கான தேவையான காலிப் பணியிடங்கள் இல்லாதிருப்பின் அவர்களுக்கு அருகில் உள்ள பிற மாவட்டங்களில் பணி நியமனம் வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(5) இந்நேர்வில் பணியமர்த்தப்படும் பணியாளர்கள், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை –15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
இயக்குநர், உள்ளாட்சி நிதி கணக்குகள் துறை, சென்னை–108
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 18/35/6.

நகல்
நிதித்துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.